| | |
|---|---|
| **UG–181** | **BFTM–21** |

# U.G. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Second Year

## தமிழ்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. "நீல மணிமிடற்ற ஒருவன்" – யார்?

2. "யாதும் ஊரே யாவருங்கேளிர்" – பாடியவர் யார்?

3. நெய்தல் கலியைப் பாடிய புலவர் யார்?

4. நெடுநல்வாடையைப் பாடிய புலவர் யார்?

5. 'இருநோக்கு இவளுண்கண் உள்ளது' இருநோக்கு எவை?

6. ஏலாதியின் ஆசிரியர் யார்?

7. ஆசாரக்கோவையை இயற்றியவர் யார்?

8. தேவந்தி யார்?

9. சீவக சிந்தாமணியின் வேறு பெயர் என்ன?

10. "பீடு அன்று" - யார் யாரிடம் கூறியது?

11. இரட்டைக் காப்பியங்கள் எவை?

12. மணிமேகலை எந்தச் சமயத்துக் காப்பியம்?

13. 'இன்னா நாற்பது' இயற்றியவர் யார்?

14. மரபுத் தொடர்கள் என்பன யாவை?

15. இணைமொழிக்கு ஒரு சான்று தருக.

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தியில்</u> விடை தருக.

16. புறநானூற்றில் இடம்பெறும் பொன்முடியார் பாடலின் கருத்துகளை எழுதுக.

17. 'செம்புலப் பெயல்நீர் போல' – கலந்தது எது?

18. "நாய்பெற்ற தெங்கம் பழம்" – பொருளைப் புலப்படுத்துக.

19. இனியவை நாற்பது கூறும் இனியவை சிலவற்றை எழுதுக.

20. சுண்ணப் போட்டியில் தோற்றுவிட்டால் என்ன தண்டம் என்று சுரமஞ்சரி கூறினாள்?

21. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

22. சொற்பொழிவுகளை எங்ஙனம் வகைப்படுத்தலாம்?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. கணியன் பூங்குன்றனார் பாடல் கருத்தினை எழுதுக.

24. 'நின்ற சொல்லர்' – எனத் தொடங்கும் நற்றிணைப் பாடலின் கருத்தை எழுதுக.

25. கபிலர் பாடிய குறிஞ்சிக்கலிப்பாடலின் நயத்தினைப் புலப்படுத்துக.

26. கல்வி பற்றி நாலடியார் கூறும் கருத்துக்களை விவரி.

27. கனாத்திறம் உரைத்த காதையில் இடம்பெறும் மாலதியின் வரலாற்றைக் கூறுக.

28. ஆற்றுப்படை நூல்கள் பற்றி எழுதுக.

29. மரபுத் தொடர்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. புறநானூற்றுப் பாடல்கள் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

31. வாய்மை பற்றித் திருவள்ளுவர் கூறுவனவற்றை விவரி.

32. நகர்நீங்கு படலத்தின்வழி அறியும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

33. பதினெண்கீழ்க்கணக்கில் இடம்பெறும் அறநூல்கள் பற்றி எழுதுக.

34. இயற்கைக் பொருள்கள் எவையேனும் ஐந்து பற்றி ஹைக்கூ கவிதை புனைக.

---